இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 355 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 20 – புதன்கிழமை 05 ஆகஸ்ட் 2026 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 355 : Thiruvalluvar Year - 2057 - Aadi 20 - Wednesday 05 August 2026 - Dak 12 Pages ₹ 5.00

## நீதிபதி அறிவுறுத்தலையும் மீறி – கையாலாகாத ‘டம்மி’ முதல்வர் விஜய் ஆட்சியின் அராஜகம்!

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் திடீர் கைது!

## தரங்கெட்ட அரசின் அராஜகத்தைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கொந்தளிப்பு – இலட்சக்கணக்கான கழகத்தினர் கைது!



**சென்னை, ஆக. 5 -**

**தஞ்சை கண்டன ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அவதூறாக பேசியதாக வழக்குப் பதிவு செய்து, கையாலாகாத ‘டம்மி’ முதலமைச்சர் விஜய் ஆட்சி நீதிபதி அறிவுறுத்தலையும் மீறி உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்துள்ளது. அரசின் இந்த அராஜகப் போக்கை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் கொந்தளித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு இலட்சக்கணக்கில் கைதாகியுள்ளனர்.**

சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் த.வெ.க. ஆட்சியில் விவசாயிகள் பாதிப்பு மற்றும் காவிரியில் தண்ணீர் திறந்து விடாததைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அவதூறாக, பேசாத ஒன்றை, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்கள் பேசினார் என்று த.வெ.க. அரசின் டம்மி முதலமைச்சர் விஜய், கற்பனை செய்து கொண்டு, உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்யும் முடிவோடு, நேற்று காலையிலே நீலாங்கரையில் உள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இல்லத்தில் போலீசார் குவிக்கப்பட்டனர்.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போலீசாரால் கைது செய்யப்படுவார் என்ற செய்தி பரவியதும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அப்போது 12 மணி வரை அவரை போலீசார் கைது செய்யக்கூடாது என்று நீதிபதி உத்தரவிட்டார்.

### நீதிபதி உத்தரவையும் மீறிய விஜய்!

நீதிபதி உத்தரவினையும் மீறி போலீசார் நீலாங்கரையில் ஆயிரக்கணக்கில் குவிந்த வண்ணமிருந்தனர்.

உடனே பல்லாயிரக்கணக்கான கழகத்தினர் குவிய குவிய அங்கே பதற்றமான சூழ்நிலை உருவானது. இந்நிலையில் நீதிமன்ற உத்தரவினையும் மீறி காவல்துறை ஆணையர் அமல்ராஜ் தலைமையில் நீலாங்கரை காவல்துறை துணை ஆணையர் விஜயகுமார் மற்றும் போலீசார், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை காலை 11 மணியளவில் கைது செய்தனர். அப்போது முன்னாள் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, எ.வ. வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு உடனிருந்தனர்.

### கழகத்தினர் முழக்கம்

உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்ததைக் கண்டித்து கழகத்தினர் சாலையில் அமர்ந்தும், படுத்தும் விஜய் அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர். இதேபோன்று தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே சாலை மறியல் மற்றும் கண்டன முழக்கங்களை கழகத்தினர் எழுப்பி தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் ஒரு அசாதாரணமான சூழ்நிலை உருவாகியுள்ளது. கைது செய்யப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அலைகழிக்கும் வகையில் காவல் துறையின் வாகனத்திலேயே அழைத்து செல்லப்பட்டார். அவரை பின் தொடர்ந்து தி.மு.க.வினர் பயணித்தனர்.

### தி.மு.க.வினர் சாலை மறியல்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை கண்டித்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தி.மு.க.வினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு இலட்சக்கணக்கில் கைதாகினர்.

## உதயநிதி ஸ்டாலினை உடனே விடுவிக்க வேண்டும்!

### கைது செய்யப்பட்ட சில மணி நேரத்திலேயே சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

**சென்னை, ஆக. 5 -**

**சென்னை உயர்நீதிமன்றம், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை காவல் நிலையப் பிணையில் (Station Bail) இன்றே உடனடியாக விடுதலை செய்ய உத்தரவிட்டுள்ளது. அவதூறு பேச்சு வழக்கில் கைது செய்யப்பட்ட சில மணி நேரங்களிலேயே இந்த அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

தஞ்சாவூரில் நடந்த காவிரி நீர் விவகாரப் போராட்டப் பொதுக்கூட்டத்தில், உதயநிதி ஸ்டாலின் அவதூறாகப் பேசியதாக தமிழக வெற்றிக் கழகம் தரப்பில் புகார் அளிக்கப்பட்டது.

இந்தப் புகாரின் அடிப்படையில் பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வழக்குப் பதிவு செய்த காவல்துறை, நேற்று காலை உதயநிதி ஸ்டாலின் அவர்களை அவரது சென்னை இல்லத்தில் வைத்து கைது செய்தது.

கைது நடவடிக்கையைத் தொடர்ந்து உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் அவசர மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) போட்டது தவறு என்று வாதாடியதையடுத்து, அவரை இன்றே காவல் நிலையப் பிணையில் உடனடியாக விடுதலை செய்ய உத்தரவிட்டது.

காவல்துறையின் விசாரணை முடிந்தவுடன் உதயநிதி ஸ்டாலின் விடுவிக்கப்படுவார் என தமிழ்நாடு அரசுத் தரப்பு வழக்கறிஞரும் நீதிமன்றத்தில் உறுதி அளித்தார்.

## உதயநிதி ஸ்டாலின் கைதினைக் கண்டித்து சென்னை முதல் தஞ்சை வரை வழியெங்கும் கழகத்தினர் சாலை மறியல் - கைது!